

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் கழகத்தினர், கடலூர் மஞ்ச குப்பத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதனைத்தொடர்ந்து கழக நிர்வாகிகள் உறுதிமொழி ஏற்றனர். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஆளுநர்கள் குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு!

# பா.ஜ.க. ஆட்சி அல்லாத மாநில அரசுகளுக்கு மிகப் பெரிய பாதுகாப்பு!

## நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பேட்டி!



நெல்லை, ஏப்.15-

நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் (அம்பாச முத்திரம் சாலையில் உள்ள) நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் காலம் கடத்தி வந்தது தவறு என திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு ஏற்ப உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் பா.ஜ.க. ஆட்சி அல்லாத அரசுகள் மீது ஆளுநர் மெத்தனப் போக்குடன் விரோதமாக செயல்படுவது சட்டத்திற்கு புறம்பானது,நீதிக்கு புறம்பானது என கூறியுள்ள உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் நீதி கிடைத்துள்ளது.தமிழ்நாடு ஆளுநர் பா.ஜ.க அரசின் ஏஜென்ட் ஆக தான் செயல்பட்டார்.தமிழ்நாடு ஆளுநர் எல்லோருக்கும் நடுவர் என்பதை மறந்து செயல்பட்டு வந்தார்.

சட்டமன்றத்தில் 10 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட நிலையில் எதற்கும் ஒப்புதல் அளிக்காமல் 'எவ்வளவு சீக்கிரமாக அவ்வளவு சீக்கிரம்'(AS soon as Possible) என்ற அரசியலமைப்பு சட்டம் 200ன் கீழ் உள்ள வார்த்தையை தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு காலக்கெடு இல்லை என்ற உணர்வோடு செயல்பட்டு வந்தார்.அவ்வாறு கூறியிருப்பது இஷ்டம் போல காலத்தை எடுத்துக் கொள்வதற்கு அல்ல.அதை தவறாக புரிந்து கொண்டு 2, 3 ஆண்டுகள் ஒப்புதல் அளிக்காமல் காத்திருந்தது மாபெரும் தவறு என உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது. அது மட்டுமல்லாது மாநில அரசுகள் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு காலக்கெடுவையும்,ஆளுநர்கள் இப்படித் தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற வரையறையும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி உள்ளது.இந்த தீர்ப்பு பா.ஜ.க ஆட்சி அல்லாத மாநில அரசுகளுக்கு ஒரு பெரும் பாதுகாப்பாக அமைந்துள்ளது.

ஒன்றிய அரசு தான் தோன்றித்தனமாக மாநில அரசுக்கு எதிராக அனைத்து துறைகளிலும் செயல் படுகிறதுஅரசியலமைப்பு சட்டத்தில் ஒன்றிய அரசின் அதிகாரம், மாநில அரசின் அதிகாரம்,மாநில அரசும், ஒன்றிய அரசும் செயல்படுத்தக் கூடிய அதிகாரம் என்று மூன்று பிரிவுகள் உள்ளது. ஆனால் மாநில அரசின் அதிகாரங்களை மதிக்காமல் மாநில அரசுகள் செயல்பட முடியாத அளவுக்கு சர்வாதிகாரமாக ஒன்றிய அரசு செயல்படுகிறது.மாநில அரசின் உரிமைகள்,மாநில சுயாட்சி பாதுகாக்கப்பட வேண்டும்.மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை ஒன்றிய அரசின் நியமனப் பிரதி ஒருவர் கட்டுப்படுத்த முடியாது,என்பதை உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தி உள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களின் உரிமைகளை,மக்களாட்சி தன்மையை பாதுகாக்கும் தீர்ப்பை தமிழ்நாடு திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுத் தந்துள்ளார்கள். அதற்காக இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் தமிழ்நாடு அரசையும் முதலமைச்சர் அவர்களையும் தொடர்ந்து வாழ்த்தும் நிலை உருவாகியுள்ளது.தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை பாதிக்கும் நீட் தேர்விற்கு எதிராகவும் உச்ச நீதிமன்றத்தில் மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும்.

மேலும் அவர் கூறுகையில்.பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு தமிழ்நாடு தான் முதன் முதலில் பெற்று தந்தது.அனைத்து மாநில முதல்வரும் குடியரசு தினத்தன்று கொடியேற்றலாம் என்ற உரிமையின் மூலம் இந்திய அளவில் அனைத்து மாநில முதல்வர்களும் கொடியேற்று உரிமையை பெற்று தந்தவர் முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். ஒன்றியத்திலும்,மாநிலத்திலும் ஆட்சியில் இருப்பவர்கள் மக்களால் தான் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,என்பதை மறந்து, தமிழ்நாட்டிற்கு நிதி தர மாட்டேன் எனச் சொல்லும் மாநில அரசை அவமதிக்கும் செயலாகும். மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் நிதி தர மாட்டேன் என ஒன்றிய அரசு கூறுவது ஜனநாயக விரோதம் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

மாநில சுய ஆட்சியை பாதுகாத்தவர் என்ற பெருமையை திராவிட மாடல் ஆட்சி முதலமைச்சர் அவர்கள் எட்டியுள்ளார்கள். வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.மிகப்பெரிய வெற்றியை பெற இருக்கிறது.மக்களாட்சி காக்கும் தீர்ப்பை திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் நமக்கு பெற்றுத் தந்துள்ளார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,விவசாய தொழிலாரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், செல்வ கருணாநிதி, மாவட்ட சுற்றுச்சூழணி அமைப்பாளர் முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# அண்ணல் அம்பேத்கர் 135-வது பிறந்த நாள் - சிலைக்கு மரியாதை!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில்!

புதுவை, ஏப்.15-

சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135-வது பிறந்த நாளை முன்னிட்டு, லப்போர்த் வீதியில் உள்ள மாநில திமுக தலைமை அலுவலகத்தில் இருந்து மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ., தலைமையில் நூற்றுக்கணக்கான கழக நிர்வாகிகள் ஊர்வலமாக சென்று, சட்டப்பேரவை எதிரில் உள்ள அண்ணல் அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முன்னதாக தி.மு.க. தலைமை அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு, சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜே.வி.எஸ். சரவணன், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், டாக்டர் மாயக் கிருஷ்ணன், ப. இளம்பரிதி, வே. மாறன் (எ) கனகராஜ், எஸ்.அமுதா குமார், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ.சீதாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், க. ரா. ஆறுமுகம், ப.வடிவேல், ஜெ.மோகன், வெ.சக்திவேல், க. ராஜாராமன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், செ.ராதா கிருஷ்ணன், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், தொ.மு.ச. அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச.பரிமளம், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந.கோதண்டபாணி, மகளிர் தொண்டர் அணி சுமதி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், நெசவாளர் அணி ந.செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந.ரவிச்சந்திரன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ம.மதிமாறன், மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ. ஷாஜகான் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக பங்கேற்று அண்ணல் அம்பேத்கருக்கு மரியாதை செலுத்தினார்கள்.



சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135–வது பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி லப்போர்த் வீதியில் உள்ள மாநில தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இருந்து மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ., தலைமையில் நூற்றுக்கணக்கான கழக நிர்வாகிகள் ஊர்வலமாக சென்று, சட்டப்பேரவை எதிரில் உள்ள அண்ணல் அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## ஊராட்சிக் கிளை மற்றும் நகர - பகுதி - பேரூர் வார்டு அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் தேர்வு

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, அறிமுகக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், அடுத்தகட்டமாக ஒன்றியத்தில் ஊராட்சிக் கிளைகளிலும், நகரம், பகுதி, பேரூர் வார்டுகளிலும் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து, கழகப் பணியாற்றும் வகையில், கழகத் தலைவர் அவர்களது உத்தரவின்பேரில் தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், இந்த அமைப்புகளுக்கு இளைஞர் அணி நிர்வாகிகளை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சிக் கிளைகள் மற்றும் நகர வார்டுகளில் 1 அமைப்பாளர், 3 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், பகுதி வார்டுகளில் 1 அமைப்பாளர், 5 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், பேரூர் வார்டுகளில் 1 அமைப்பாளர், 2 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இந்தப் பொறுப்புகளில் செயல்பட விரும்பும் இளைஞர்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிரப்பி, உரிய ஆவணங்களுடன் மாவட்டக் கழகச் செயலாளரிடமோ, மாநில துணைச் செயலாளரிடமோ, மாவட்ட அமைப்பாளரிடமோ அல்லது அன்பகத்திலோ வழங்கலாம்.

**விதிமுறைகள்**

- 18 முதல் 35 வயதுடையோர் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்து விண்ணப்பிக்கலாம். மாவட்டக் கழக அலுவலகம், மாவட்ட அமைப்பாளர் மற்றும் அன்பகத்திலிருந்தும் விண்ணப்ப நகலைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்துடன் வாக்காளர் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் நகல் இணைப்பது அவசியம்.
- இதுவரை ஆற்றிய கழகப் பணிகள் குறித்த ஆவணங்கள் இருக்கும்பட்சத்தில் அவற்றின் நகல்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பலாம்.
- ஏப்ரல் 30–க்கு மேல் தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கிளை மற்றும் வார்டு பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் அதன் எல்லைக்குள் வசிப்பவர்களாக இருப்பது அவசியம்.



## தி.மு.க. இளைஞர் அணி

### கிளை, வார்டு அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் சுயவிவரப் படிவம்

கழக மாவட்டம் : ..............................................

சட்டமன்றத் தொகுதி : ..............................................

ஒன்றியம், ஊராட்சி, கிளை : ..............................................

நகரம் / பகுதி / பேரூர், வார்டு : ..............................................................

விண்ணப்பிக்கும் பொறுப்பு : ☐ அமைப்பாளர் ☐ துணை அமைப்பாளர்

பெயர் : ..............................................................................

தந்தை பெயர் : ..............................................................................

பிறந்த தேதி : ............................... வயது..................................

கல்வித் தகுதி : ..............................................................................

தொழில் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

.......................................... PIN: ..............................

வாட்ஸ்–அப் எண் : ..............................................................................

மின்னஞ்சல் முகவரி : ..............................................................................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும்விதமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
2) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை / ஆதார், கல்விச் சான்றிதழ் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-04-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி